பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

கர்த்தராகிய

# கிறிஸ்து

என்னும் இரட்சகர்

உங்களுக்குத்

தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

லூக். 2:11

இதழ் : 06

மலர் : 28

# முதன்மை ஊழியரிடமிருந்து...

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு நமக்காக பிறந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். சாத்தானும், சத்துருவும் எதுவும் மேற்கொள்ளாமல்: நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. சபையின் ஆண்டு விழாவையும் விசேஷித்த சபை கூடுகைகளையும் ஆராதனைகளையும் நடத்த தேவன் பாராட்டின கிருபைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த மாதத்தின் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள், Carol யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி கர்த்தருக்கு பயந்து உண்மையும் உத்தமுமாய் ஊழியம் செய்ய ஜெபிப்போம். சபையில் பொல்லாங்கன் நுழைந்துவிடாதபடி ஜெபிப்போம். டிசம்பர் மாதம் முழுவதும் கிறிஸ்து பிறப்பை இயேசுவின் நாமம் மகிமைப்படும்படி அநுசரிக்கவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**"கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக். 2:11)** என்ற **நற்செய்தியானது "கிறிஸ்து (மேசியா)"** என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும் "இரட்சகர்" என்பதற்கு சகல பாவங்களிலுமிருந்தும் நம்மை விடுவித்து இரட்சிக்கிறவர் என்பதையும் நமக்கு ஆதிமுதலே தேவன் விளங்கப்பண்ணினார் என்று உணர்ந்து கொள்ளமுடியும்.

இயேசு தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று தேவ தூதர்கள் அறிவித்த போதே **"இயேசு"** சாதாரண மனிதர் அல்ல: தேவன் என்கிற அடையாளத்தைப் பெற்றவர், தேவனுடைய குமாரன் (யோவா. 3:16) என்கிற மகிமையை தரித்தவர், தேவன் தாமே மனிதனாய் (1தீமோ. 3:16) மறுரூபமாய் வந்திறங்கியவர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த தேவனாகிய "இயேசுவே" நம் பாவங்களிலிருந்து நம்மை

விடுவிக்கும் இரட்சகர் என்பதையும் தேவ தூதன் அறிவித்தார். நம் பாவமானது நமக்கும் நம் தேவனுக்கும் உண்டான உறவில் பெரிய பிளவை உண்டுபண்ணி இருந்தது. இந்த பிளவை நீக்கி நாம் தேவனோடு ஒப்புறவாகும்படியே இயேசு தன்னை பலியாக ஈந்து, நமக்கும் நம் தேவனுக்கும் மத்தியஸ்தருமானார். இதனால் இயேசு இரட்சகர் என்பதையும் நிலைப்படுத்தினார்.

இந்த இயேசு நமக்காக பிறந்தார் என்று மட்டுமில்லாமல் **"இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20)** என்று நமக்கு வாக்குப்பண்ணி நம்மோடு சதாகாலமும் இருக்கிறார் என்ற விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் தேவனுக்கு பிரியமானபடி ஜீவிப்போம். தேவன் நமக்கு நன்மையானதை தருவார். சபையார் யாவருக்கும் கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துகள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கர்த்தர் கிருபையில்**
**சகோ. ஆரோக்கியதாஸ். P**

# தேவச் செய்தி

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துகளைச் சொல்லுகிறேன். கிறிஸ்துமஸ் என்பது இயேசு கிறிஸ்துவின் ஜனனமாய் இருக்கிறது. இதை நாம் ஏதோ ஒரு நாளென்று நினைத்துக் கொண்டாடக் கூடாது. தினம் தினம் கிறிஸ்து நமக்குள் பிறக்க வேண்டும். நம்முடைய முழு வாழ்நாள் கொண்டாட்டமாக இருக்க வேண்டும்.

**ஏசாயா 9:6** ல் **"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்"** என்று கூறியபடி நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக, தேவாதி தேவனாக, கர்த்தாதி கர்த்தராக இருக்கிறார். அவர் நம்மில் அதிகமாக அன்பு கூறுகிற தேவனாயிருக்கிறார். அவர் நம்மீது அன்பு கூறுவதைப் போல் யாரும் நம்மீது அன்பு கூறவே முடியாது. அவர் இந்த உலகத்தில் அவதரித்து நம்முடைய பாவங்களுக்காகவும், நம்முடைய நோய்களுக்காகவும், நம்முடைய சாபத்திற்காகவும் நமக்கென்று அவர் மரித்து மூன்றாம் நாளில் உயிர்தெழுந்து, நமக்கென்று நித்திய ஜீவனை ஆயத்தப்படுத்துகிற தேவனாயிருகிறார்.

இந்த உலகத்தில் நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமான வாழ்க்கையல்ல. இது தர்காலிகமான வாழ்க்கை. நாம் இயேசு கிறிஸ்துவிற்கு பிரியமான வாழ்க்கை வாழும் போது நாம் அவரோடு நித்திய நித்தியமாக பரலோக இராஜ்ஜியத்தில் வாழ்கிறவர்களாக இருப்போம். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடையும்படியாக தேவன் வாக்களித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை

ஏற்றுக் கொள்ளும் போது அவர் நம்முள் கர்ப்பந்தரிக்கிறார். அவ்வாறு நம்முள் உருவாகும் கிறிஸ்துவானவரின் குணாதிசயங்கள் தினம் தினம் நம் வாழ்வில் உருவாக வேண்டும். நாம் பூரணப்படுபகிறவரைக்கும் கர்த்தருடைய சுபாவங்கள் தினம் தினம் உருவாக வேண்டும். அதுதான் கிறிஸ்து பிறப்பின் ஒரு நற்செய்தியாயிருக்கிறது.

இந்த பண்டிகை காலங்களில் நாம் பாரம்பரிய காரியங்களை மட்டும் செய்கிறவர்களாய் இராமல், நம்முடைய கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்துகிற காலமாக அமையப்படுவதாக. இந்த காலம் மட்டுமல்ல நம்முடைய வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவினுடைய அன்பை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். **1 யோவான். 1:1 "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்".** தேவன் வார்த்தையாக நமக்குள் இருக்கிறார். அந்த வார்த்தையின்படி நாம் ஜீவித்தால் நாம் நித்திய ஜீவனை அடைவோம். அதற்குரிய கிருபைகளை கர்த்தர் நமக்கு கொடுப்பாராக.

நாம் அவருடைய பிறப்பை நோக்கும் போது அவர் பெத்லகேம் என்ற ஊரில் பிறந்தார். பெத்லகேம் என்று சொல்லும் போது. அது யூதா மற்றும் எல்லா தேசங்களிலும் மிகவும் சிறிய ஊராக காணப்பட்டது. **மீகா 5:2 "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது"**என்று வாசிக்கிறோம். நம்முடைய தேவன் சர்வ சிருஷ்டிக்கும் எஜமானராய் இருக்கிறார். ஆதியிலே அவர் தான் நம்முடைய தேவன், சர்வ வல்லமையுள்ள தேவன், அவர் நினைத்தால் ஒரு பெரிய அரண்மனையில் பிறந்திருக்கலாம். ஆனால் அவர் ஒரு சிறிய ஊரான பெத்லகேமில் பிறக்க சித்தம் கொண்டிருந்தார். எந்த காரியத்தையும், எந்த நபரையும் கர்த்தர் சிறியது என்று எண்ணுவதேயில்லை. நாம் நம்மை காண்கிற இந்த உலகத்தோடு ஒப்பிட்டு, தாழ்வு மனப்பான்மை உடையவர்களாய் இருக்கலாம். ஆனால் கர்த்தர் நம்முடைய வெளிப்புரமான தோற்றத்தையல்ல இருதயத்தைப் பார்க்கிற தேவனாயிருக்கிறார். நாம் அனைவரும் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாயிருக்கிறோம். வேதம் சொல்லுகிறது கர்த்தரிடத்தில் பட்சபாதம் இல்லை. அவர் எல்லோரையும் ஒரே விதமாக பார்க்கிற தேவனாயிருக்கிறார். அதனால் நாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை விசுவாசிக்கும் போது, நம்மை நாமே தாழ்ந்தவர்களாய் எண்ணாமல், இயேசு கிறிஸ்துவின் கிருபையின் நிமித்தமாக அவருடைய பார்வையில் உயர்ந்தவர்களாய் இருக்கிறோம் என்று நினைத்து, கர்த்தரை நாம் ஸ்தோத்தரிக்கலாம்.

இயேசு கிறிஸ்து பிறந்த பிறகு அவரை முன்னணையில் கிடத்தினார்கள். முன்னணை என்பது தாழ்மையைக் குறிப்பிடுகிறது. அரண்மனையில் பிறக்க அவர் விருப்பப்படாமல் முன்னணையை தெரிந்துக் கொண்டார். இயேசு கிறிஸ்துவைப் போலவே நாமும் தாழ்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். வேதம் சொல்லுகிறது தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை கொடுக்கிற தேவன். நாம் நமது படிப்பைக் குறித்தோ, அந்தஸ்த்தைக்குறித்தோ, திறமையைக் குறித்தோ எந்த விதத்திலும் பெருமையுள்ளவர்களாய் காணப்படவே கூடாது. நம்முடைய நினைவெல்லாம்

கர்த்தருடைய கிருபையியால் தான் எல்லாம் என்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் சமாதானத்தோடு இருப்பது சத்துருவானவனுக்கு சித்தமல்ல. நம் தேவன் தான் நம்முடைய சமாதான பிரபுவாய் இருக்கிறார். நமக்கு சமாதானத்தைக் கொடுக்கத் தான் அவர் நமக்காக பிறந்தார். அது மாத்திரமல்ல அவருடைய பிறப்பின் செய்தி மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியை கேட்ட மேய்ப்பர்கள் அதை அவர்களுடனே வைத்துக் கொள்ளாமல் தீவிரமாக அவர்கள் போய் குழந்தையைப் பார்த்து அந்த நற்செய்தியை பிறருக்கும் சொன்னார்கள். நம்மையும் கர்த்தர் அந்த மேய்ப்பர்களைப் போல தெரிந்து கொண்டிருக்கிறார். இடறிப் போய்க் கொண்டிருக்கிற ஆடுகளுக்காக (ஆத்துமாக்களுக்காக) நம் கர்த்தருடைய பிறப்பின் நற்செய்தியை கூறுகிற மேய்ப்பராக கர்த்தர் நம்மை நியமித்திருக்கிறார். இது நம்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. **மத்தேயு 28 : 19 – 20 -ல் "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்"**. அதன்படி கர்த்தரின் சுவிசேஷத்தைப் பற்றி உலகத்திற்கு அறிவிக்கிறது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

சாஸ்திரிகள் இயேசு கிறிஸ்துவை பார்க்க வந்தார்கள். வந்த அவர்கள் தாழ பணிந்து கிறிஸ்துவை வணங்கினார்கள். இது நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை கிறிஸ்துவிற்கு முழு அர்ப்பணமாக கொடுக்கிற வாழ்க்கையை காண்பிக்கிறது. நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்புக் கொடுக்கும் போது கர்த்தர் தாமே அவரைப் போல் நம்மை மாற்றி பெரிய காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் நடப்பிக்கிற தேவனாயிருக்கிறார். சாஸ்திரிகள் என்றால் அவர்கள் கொண்டு வந்த பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் காணிக்கையாக வைத்தார்கள். பொன் நம் கிறிஸ்துவை ராஜாவாகவும், தூபவர்க்கம் ஆசாரியர்க்கு ஒப்பாகவும், வெள்ளைப் போளம் அவரை தீர்க்கதரிசியாகவும் குறிப்பிடுகிறது.

ஆகையால் இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் நாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மெய் பொருளை உணர்ந்தவர்களாய் நம்மை முழுமையாக கர்த்தருடைய கரங்களில் ஒப்புக் கொடுக்கும் போது, கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்கிறவராய் இருக்கிறார், நம்மை வனைகின்ற தேவனாயிருக்கிறார். நாம் குயவன் கைகளிலில் கொடுக்கப்பட்ட களிமண்ணைப் போல கர்த்தருடைய கைகளில் இருக்கிறோம். கர்த்தர் தாம் நம்முடைய குயவனாய் இருக்கிறார். நம்முடைய சுபாவங்களை அவர்தான் உருவாக்குகிற தேவனாயிருக்கிறார். தேவன் தாமே இந்த வார்த்தையின் மூலம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**கர்த்தரின் ஊழியத்தில்**

**Sis. பிரிஸ்சில்லா ஆமோஸ்**

## சுக்கான்!!!!

கர்த்தர் நாமம் மகிமைபடுவதாக! அல்லேலுயா!!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு "கிறிஸ்துவினாலும்" உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. பரிசுத்த ஆவியானவர் இந்த வார்த்தையின் மூலம் நம்மோடு இடைடுவாராக!

கர்த்தருக்குள் பிரியமானவர்களே!!

வேதம் சொல்கிறது **நீதிமொழிகள் 31 : 29** ல் **"அநேகம் பெண்கள் குணசாலி களாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள் என்று புகழுகிறான்".** உண்மை தான் பெண்களாகிய நமக்கு தேவன் அளித்திருக்கிற மேலான பாக்கியம் என்றே சொல்லலாம். அது நம் வாழ்க்கை என்னும் கடலில் மிதந்து செல்லும் கப்பலின் மாலுமியாகிய கர்த்தர் அவர் விருப்பத்தின்படி திசை திருப்பி கரை சேர பயன்படுத்தப்படும் **"சுக்கான்"** என்பதாக அர்த்தம் கொள்ளப்படுகிறோம். கப்பல்களை பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் , அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சரியான சுக்கானாலே திருப்பப்படும். **(யாக்கோபு 3 : 4)** இப்படியாக மாற தேவன் கிருபைபுரிவாராக!.

இயற்கையாகவே பெண்கள் 23 அல்லது 25 வருடம் வளர்த்த பெற்றோர்களை விட்டு, சொந்தபந்தங்களையும், ஊரையும் விட்டு திருமண பந்தத்தில் இணைந்த கணவர் வீட்டிற்கு தனி ஆளாய் வந்து தனது சவாலாய் அமைந்த வாழ்க்கையை எதிர்கொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகவே மிகவும் மனவலிமை படைத்தவர்கள் தான். அதிலும் தேவனோடு உறவாடிக் கொண்டிருக்கும் பெண்களாகிய நாம் தனி சிறப்புடன் நடந்து நம் வீட்டை கர்த்தருக்குள் எற்புடையதாய் கட்ட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

உதாரணத்திற்கு வேதாகமத்தில் அநேகம் பெண்கள் சொல்லப்பட்டிருந்தாலும் மிக முக்கியமான இடம் வகிப்பது **"ரெபெக்காள்"** என்பதில் சிறிதும் ஐயமில்லை என்றே விசுவாசிக்கிறேன். அவளின் மெல்லிய அமைதியான அழகிய குணங்களை வாசிக்கும் போது தேவன் இடைபட்ட வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள தேவன் உதவிசெய்வாராக!

### முதலாவது தேவ திட்டத்தின்படி ஆயத்தப்பட்டிருந்தாள்

**ஆதியாகமம் 24 : 7** ல் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. **"தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்"** என்ற விசுவாச வார்த்தை ஆபிரகாமிடமிருந்து வெளிப்பட்டது. இது பரலோகத் திட்டம் என்பதை அவனுடைய ஊழியக்காரன் செய்ததிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். அவனோ வேறு யாரிடமோ குறிசொல்கிறவர்களிடத்திலோ செல்லாமல் தன் எஜமானாகிய தேவனிடத்திற்கு சென்று தன் மனதில் வேண்டுதல் செய்கிறான் என்று **ஆதியாகமம் 24 : 12 – 14** வசனத்தில் வாசிக்கிறோம். **15 ம்** வசனத்தில் அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே! ரெபெக்காள் புறப்பட்டு வந்தாள் என்று வாசிக்கிறோம். பிரியமானவர்களே இப்படியாக தேவனிடத்தில் அந்த ஊழியகாரன் கேட்டுக்கொண்டபடியெல்லாம் நடந்துகொண்ட ரெபெக்காள் நிச்சயமாக அனுதினமும் தேவனோடு சஞ்சரிக்கிறவளாய் தான் இருந்திருக்க கூடும். இல்லையென்றால்

ஊழியக்காரன் எதிர்பார்த்த அந்த அடையாளங்களை அவளால் பூரணமாக செய்திருக்க முடியாது. மேலும் **"இந்த காரியம் கர்த்தரால் வந்தது"** என்று நிச்சயமாகவே உணர்த்தபட்டவளாய் சகோதரன் மற்றும் தகப்பனின் வாய்மொழி கேட்டு **"போகிறேன்"** என்ற தீர்க்கமான முடிவு எடுக்க காரணமாய் இருந்தது. கணவரை கண்டறியாத ரெபெக்காள் கர்த்தர் பேரில் உள்ள விசுவாசத்தால் அவ்விடம் விட்டு தேவ திட்டத்தை நிறைவேற்ற தன்னை அர்பணித்தாள்.

**இரண்டாவதாக அவளிடம் இருந்த உயரிய குணம் கர்த்தரிடத்தில் ஆலோசனை பெறுவது.**

**ஆதியாகமம் 25 : 22** ல் வாசிக்கிறோம். கணவனின் வேண்டுதலினால் 20 வருடம் அடைத்திருந்த கர்ப்பம் திறந்தது, கலங்கி நின்ற வேளை பதட்டமான சூழல் இருப்பினும் எந்த ஆர்பாட்டமும் இல்லாது கர்த்தரிடம் சென்று ஆலோசனை பெறுகிறாள் தன் பிள்ளைகளுக்காக, என்னே அவளது குணம். இக்காலகட்டத்தில் நாமோ நம் பிள்ளைகளை குறித்து எங்கு சென்று விசாரிக்கிறோம், நண்பர்களிடமும், உறவினர்களிடமும், நம் பிள்ளைகளின் நண்பர்களின் பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் நம் பிள்ளைகளை குறை கூறி திறிகிறோம். இல்லை பிரியமானவர்களே! நம் பிள்ளைகள் தேவன் தந்தருளிய ஈவு அவர்கள் கர்த்தரின் சித்தத்தின்படி நமக்கென்று உருவாக்கப் பட்டவர்கள். நம் கர்ப்பத்தில் இருக்கும்போதே தேவன் அவர்களை தெரிந்துகொண்டார். நிறைய தாய்மார்கள் தத்தம் கர்ப்ப பிள்ளைகளை குறித்த தேவதிட்டம் என்ன என்பதை தேவனிடம் கேட்டறிய தவறிவிட்டிருக்கிறோம். மாறாக பிள்ளைகளை குறித்தும் அவர்களின் எதிர்காலத்தை குறித்தும் கவலை கொள்ளாது அவர்களை அடுத்தவர்களிடம் குறை கூறி தூற்றி திரிகிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் இப்படி பட்டதான காரியங்களை நம்மிடமிருந்து விலக்கிக் கொள்ள விரும்புகிறார்.

தேவ ஜனமே! இந்த ரெபெக்காள் தன் கணவனின் ஏற்ற தாழ்விலும் எப்போதும் கூட இருந்தாள், தொழிலிலும், வாழ்க்கையிலும் மனமடிவாய் இராமல் எல்லாவற்றிலும் பொறுமையாய் இருந்தாள். தன் கணவர் கர்த்தரின் திட்டத்திற்கு அதாவது பரலோக திட்டத்திற்குமாறாக செய்ய நினைத்த வேளையிலும் **(ஆதியாகமம் 27 : 4)** ஞானமாய் இந்த காரியத்தை செய்தாள் என்று **(ஆதியாகமம் 27 : 6 – 10)** வாசிக்கிறோம். பிரியமானவர்களே! இந்த கால கட்டத்தில் தாய் 2 இக்காரியம் சாதாரணமானதே! ஆனால் ஒரே கர்ப்பத்தில் உண்டான இரண்டு பிள்ளைகளுக்கு குறித்த தேவ திட்டம் அறிந்து ஞானமாய் சுக்கானை திருப்பிய தேவனுக்கு அவள் உறுதுணையாய் இருந்தாள்.

**மூன்றாவதாக பரலோக திட்டம் நிறைவேற தன்னை அர்ப்பணிக்கிறவளாய் இருந்தாள்.**

வேதம் இப்படியாக சொல்லுகிறது **ஆதியாகமம் 27 : 13** ல் சாபம் தனக்கு வரட்டும் ஆனால் தேவதிட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்ற தீர்க்கமாய் தைரியமான முடிவு எடுக்கிறவளாய் காணப்பட்டாள்.**ஆதியாகமம் 27 : 6 – 29** ம் வரை வாசிப்போமானால் ஒரு பெண் அல்லது தாய் தன் பிள்ளையை குறித்ததான பரலோக திட்டம் நிறைவேற கொண்டிருக்கிற மனவாஞ்சையை வெளிப்படுத்துகிறது. இதை உலக கண்ணோட்டத்தோடு பார்த்த யாக்கோபுக்கும் தன் தகப்பன் தன்னை எத்தனாய் பார்த்துவிட்டால் அது தனக்கு சாபமாக வந்துவிடுமே என்று பயந்தான்,

விசுவாசமில்லாமல் என்று கூட சொல்லலாம் (ஆதியாகமம் 27 : 12) இருப்பினும் தந்தையாகிய ஈசாக்குக்கும் இது ஒரு தந்திரமாகவே தான் (ஆதியாகமம் 27 : 35) காணப்பட்டது. ஆனால் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று அறிந்த ரெபெக்காளுக்கோ இது தேவனுடைய பரலோக திட்டமாய் காணப்பட்டது. ஆகவே தான் தேவ திட்டத்திற்கு நீங்கலாக்கப்பட்ட மகன் மீது பட்சமாயிராமல் ரெபெக்காளோ யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள் என்று வாசிக்கிறோம் (ஆதியாகமம் 25 : 28)

ஏனெனில் ஏசா தேவன் விலக்கிவைத்த அல்லது வெறுத்த ஜனத்தாரிடமிருந்து பெண் கொண்டான், விவாகம் செய்தான். அவர்கள் பெற்றோர்களுக்கு மனநோவாயிருந்தார்கள் என்று வேதம் சொல்கிறது. (ஆதியாகமம் 26 : 35) அதுமட்டுமல்ல ஆதியாகமம் 27 : 41 – 42 ல் ஏசா தன் இருதயத்தில் சொல்லிக்கொண்ட வார்த்தைகள் ரெபெக்காளுக்கு யார்? எப்படி? அறிவித்திருக்கக் கூடும். எல்லாவற்றையும் குறித்து தேவனிடத்தில் விசாரிக்கிற அவளுக்கு தேவனால் தான் இந்த காரியம் அறிவிக்கப்பட்டிருகக் கூடும் என்பதில் சந்தேகமில்லை பிரியமானவர்களே அதுமட்டுமல்ல பின்னும் ஒரு காரியத்தை மிகவும் தெளிவாக செய்ததை ஆதியாகமம் 27 : 42 – 45-ல் வாசிக்கிறோம் யாருக்கும் மனமடிவில்லாமல், யாருக்கும் இழப்பில்லாமல் அவளின் வாய்மொழி மிகவும் கர்த்தருக்குள் ஏற்புடையதாய் இருந்தது. இந்த காலகட்டத்தில் நம் குடும்பங்களில் நாம் எப்படி வார்த்தைகளை பயன்படுத்துகிறோம், எவ்வாறு ஒரு தாயின் பிள்ளைகளை நடத்துகிறோம். கணவருடன் பேசுகின்ற வார்த்தைகள் எப்படி இருக்கின்றது என்று சிந்திப்போம்.

அவள் தன் கணவருடன் ஆதியாகமம் 27 : 46 ல் மிகவும் ஆழமான கருத்துகளை எளிய முறையில் எடுத்துரைக்கிறாள். என்னே!! ஒரு தெய்வீக ஞானம் பாருங்கள் நீதிமொழிகள் 31 : 26 ன் படி அவள் தன் வாயை ஞானம் விளங்க திறக்கிறாள்.

கடைசியாக சகோதரிகளே!

ஆதியாகமம் 28 : 1 – 5 வசனங்களை பாருங்கள் தேவராஜ்யத்தின் திட்டத்தை நிறைவேற்றுகிறவளாய் இருந்தாலும் அதை செயல் படுத்துகிறது அவளுடைய கணவனாய் இருக்க வேண்டுமென்கிற உயரிய குணம் அவளிடமிருந்தது.

நீதிமொழி 31 : 11 ன் படி அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவள் எடுக்கிற அல்லது அவள் சொல்கிற வார்த்தையில் ஒருபோதும் தவறு இருக்காது என்று ஈசாக்கு விசுவாசித்தான். பிரியமானவர்களே! நம்மிடையே எத்தனை பேரிடம் இத்தகைய குணம் காணப்படுகிறது என்று நம்மை நாமே கர்த்தருக்குள் சிந்தித்துப் பார்போம்.

இந்த ரெபெக்காள் எப்படியாக தேவனோடு உறவாடி தேவ திட்டத்தை தன் குடும்பத்தில் நிறைவேற்றிட ஞானமாய் செயல்பட்டாளோ அதேபோல நாமும் நம் வாழ்க்கையில் (கப்பல் பயணத்தில்) தேவ திட்டம் என்ன என்று அறிந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கிறவர்களாய் (சென்றுசேர வேண்டிய இடம்) வாழ தேவன் பயன்படுத்தப்படும் சுக்கான்களாய் மாற தேவன் இரக்கம் கிருபை புரிவாராக. ஆமென்

கிறிஸ்துவுக்குள்

சகோதரி. நகோமி எலிசபெத்.

## வாலிபர் பகுதி

கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் ஐக்கியப்பட்டுள்ள அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகை கால வாழ்த்துக்கள்.

**மத்தேயு 7 : 24 – ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.** வருகின்ற மாதம் நாம் அநுசரிக்கவுள்ள இந்த கொண்டாட்டங்களின் மத்தியில் மறவாமல் நம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான பல செய்திகளில் ஒன்று என்னவென்று நான் கருதுகிறேன் என்றால் , தேவன் இந்த மண்ணுலகிற்கு உட்பட்டவராய் பிறந்து, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு அர்ப்பணித்தவராய் எவ்வாறு வாழ்ந்தார் என்பதையும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் மேலுள்ள புரிதலோடு நாம் எவ்வாறு அர்ப்பணித்தவர்களாய் வாழ வேண்டும் என்பதே. அதற்கு ஆதாரமாக நாம் எடுத்துக் கொண்ட வேத பாடம் **மத்தேயு 5 : 21 முதல் 7 ஆம் அதிகாரம் வரையுள்ள வசனங்கள்**. அதிலுள்ள இயேசு கிறிஸ்துவின் போதனைகளை மூன்றாக பிரித்துக் கொள்ளுவோம்

1) தேவ இராஜ்ஜியத்திற்கு அர்ப்பணித்த நாம் இந்த மண்ணுலகத்தில் வாழுகின்ற போது ஒருவரோடு ஒருவர் எவ்வாறு ஐக்கியப் படவேண்டும் என்பது.
2) நாம் தேவனோடு எவ்வாறு ஐக்கியப் படவேண்டும் என்பது
3) தேவ இராஜ்ஜியம் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கும் என்பது

**முதலாவது சக மனிதர்களோடு நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பது.**

அதற்கு **மத்தேயு 5 : 21 – 48** வரையுள்ள வசனங்களை நாம் தியானிக்க வேண்டும். அவற்றுள் சிலவற்றை நாம் ஆராய்வோம்.

**மத்தேயு 5 : 22 "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்".** இந்த வசனத்தின் ஒவ்வொரு வரிகளுக்கும் இடையே பயண்படுத்தப்பட்ட அரைப்புள்ளியின் அல்லது (semicolon) (;) யின் அர்த்தத்தை நாம் புரிந்தவர்களாய் வாசிக்கும் போது வசனத்தினுடைய அர்த்தத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அரைப்புள்ளி என்பது தொடர் நிகழ் காலத்தை குறிப்பிடுகிறது. அதாவது நியாயமில்லாத கோபம் என்பது மற்றவர்களின் நடத்தையோ, பேச்சுகளோ நமக்கு பிரியமில்லாதிருக்கும் போது அல்லது நமக்கு உடன்படாத காரியங்களை அவர்கள் செய்யும்போது அவர்கள் மீது கோவப்படுவதே. ஆனால் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பழுதுள்ள இந்த உலகில் **தேவன் கூறும்** பழுதற்றவர்களாய் நாம் வாழ பிரயாசப்பட வேண்டுமே தவிர, மற்றவர்கள் நமது அறிவிற்குட்பட்ட செம்மையான வாழ்வை வாழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறானது என்று. அவ்வகையான எதிர்பார்பு ஏமாற்றத்தை தந்து நம்மை கோபமடையச் செய்யும், அதுவே நியாயமில்லாத கோபம். நமக்கு நியாயமில்லாத கோபத்தை கொண்டு வரும் காரியங்களை பிறர் தொடர்ந்து செய்யும் போது நாம் அவர்களை மூலையில்லாதவர்கள் அல்லது மூடர் என்று கூறுகிறோம். அது தவறானது மாறாக நாம், நமக்கு கிறிஸ்துவின் பார்வை வேண்டும் என்று ஜெபிப்போம்.

தொடர்ச்சி 12-ம் பக்கம்

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

**“ உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி-12:2 ) ”**

சகோ.பீட்டர் ராமச்சந்திரன்
செல்வி. ரேச்சல் வினோத்
செல்வன்.சாமுவேல் பால் பெஸ்டஸ்
சகோதரி.நயோமி வேலு ராமர்
சகோதரி.சசிகலா வேலு ராமர்
சகோதரி. மேரி ஹானி ஷீபா ராணி
வெங்கடேஷ்
செல்வன்.ஜோயல் ஜஸ்டின்
சகோதரி.விஜயா ஆண்டனி
சகோதரி.கிப்ளின் ஏஞ்சல்
கிதியோன் ராஜ்
சகோ.பால் ராஜேஷ்
சகோதரி.கிளாடிஸ் பாப்பி சிவக்குமார்
சகோ.டேனியேல் தேவபிரசாத் மனோஜ்
சகோ.சாம் சுந்தர்
சகோதரி.சசிரேகா சதீஷ்குமார்
செல்வன்,டெரில் கேட்சன் ஸ்டீபன் ஜெயக்குமார்
செல்வி.ரெய்ன்ஸ் ரோஸி ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஜீனா சதீஷ்குமார்
செல்வி.ஜெர்ஸிலின் நியா ஜோன்ஸ்
சகோதரி.சிவகுமாரி ஜஸ்டின்
செல்வன்.சுபாஷ் சந்திரபோஸ் பாலமுருகன்

செல்வி. சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வி.அத்சா செல்வராஜ்
செல்வன். ஜான்சன் ராஜவேல்
சகோ.சிவக்குமார்
செல்வன்.பெஞ்சமின் வேலுராமர்
செல்வி.இவ்லின் ஸ்டெபி சகாய டார்வின்
சகோதரி.லில்லி ப்ளோரா ஆரோக்கியதாஸ்
சகோ.செல்வராஜ்
சகோ.விபின்
சகோ.ஆல்வின் முத்தையா
சகோதரி.ஜெனிபா கனீஷ் ஜோஸ்வா
சகோ.பால்ராஜ் சேகரன்
செல்வன்.கதிர் ஆண்டனி
சகோ.எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.கிரேஸ்லின் எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.ஸ்டெனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோதரி.ஜாஸ்மின் மெர்சி பென்சாம்




# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

**கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)**

திரு&திருமதி. தாஸ் கருணா & மரியா குளோரி
திருமதி&திரு. நக்கீரன் & ஜமிலா ஜோய்ஸ்
திரு&திருமதி. கிறிஸ்டோபர் தேவராஜ் & ஸ்னேஹலதா
திரு&திருமதி. வேலுராமர் & சசிகலா
திரு&திருமதி. T. ஸ்டீபன் & சுபா
திரு&திருமதி. R.சத்தீஷ் & சரண்யா
திரு&திருமதி. சாமுவேல் விஸ்வநாதன் & எல்ஜீவா அரியூர்
திரு&திருமத. பிரசாத் சுந்தரேசன் & ஷீபா
திரு&திருமதி. ஜான்சன் நகோமி & எலிசபெத்
திரு&திருமதி. ஆல்வின் முத்தையா & பிங்கி

திரு&திருமதி. ராஜன் ராஜையன் & பிங்கிஷா
திரு&திருமதி. ஜெய்சாம் டேனியேல் & பெபின் மெரிஜோ
திரு&திருமத. செல்வராஜ் & எவெலின் சுனிதா
திரு&திருமதி. பால் அறிவுச்சுடர் & பிரீமிதா ரூத் பிரிக்டா
திரு&திருமத. பென்சாம் & ஜாஸ்மீன் மெர்சி
திரு&திருமத. ப்ரெட்சிலின் ஜாக்சன் ஆஷா தேவி



‘ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள் ’ – 1.கொரிந்தியர் 10 : 31

# 2025 – டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/12/2025 | சகோ. தாமஸ் | சகோ. சாமுவேல் தாசையா |
| 12/12/2025 | பிறசபைகள் பாடகர் குழு ஆராதனை | |
| 19/12/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை (Fr-Micheal Mbona, St. Paul's Church) | |
| 26/12/2025 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ. ஸ்டாலின் |

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/12/2025 | சகோதரி.செலின் டேவிட் | சகோதரி.எப்சிபா ஸ்டீபன் |
| 14/12/2025 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ. பிரசாத் |
| 21/12/2025 | சகோதரி.ஆஸ்லின் சுபின் | சகோதரி.நகோமி ஜான்சன் |
| 28/12/2025 | சகோ. கிரண்குமார் | சகோ. எபிநேசர் |

## ஆராதனை ஒழுங்குகள்

### சங்கிலி தொடர் ஜெபம்

04/12/2025 மாலை 6:00 முதல் 05/12/2025 காலை 6:00 வரை

11/12/2025 – முழு இரவு ஜெபம் 10PM முதல் 1 AM வரை

25/12/2025 அன்று கிறிஸ்துமஸ் ஆராதனை
இடம் – அஹமதி தமிழ் திருச்சபை ( நேரம் இடம் பின்னர் அறிவிக்கப்படும் )

31/12/2025 அன்று விழிப்பு இரவு ஆராதனை
( நேரம் இடம் பின்னர் அறிவிக்கப்படும் )

01/01/2026 அன்று புது வருட ஆராதனை
இடம் – அஹமதி தமிழ் திருச்சபை ( நேரம் இடம் பின்னர் அறிவிக்கப்படும் )

9-ம் பக்கம் தொடர்ச்சி

**இரண்டாவது தேவனோடு நமக்கு உள்ள ஐக்கியம் எவ்வாறாக இருக்கு வேண்டும் என்பதே:**

**மத்தேயு 6 : 4 அப்பொழுது *அந்தரங்கத்தில்* பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்.**

**மத்தேயு 6 : 6 நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, *அந்தரங்கத்திலிருக்கிற* உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.**

**மத்தேயு 6 : 17 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், *அந்தரங்கத்தில்* இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.**

**மத்தேயு 6**ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து, நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு அந்தரங்கத்தில் அல்லது நம்மை சுற்றி யாரும் இல்லாத வேளையில் நமக்கு தோன்றுகிற சிந்தனைகளில் தேவ சிந்தையோடு ஐக்கியப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை வலியுருத்தி கூறுகிறார்.

அவ்வாறு தேவ சிந்தை நிறைந்தவர்களாய் வாழ்கின்ற போது, **மத்தேயு 6 : 7 – 13** வரையுள்ள ஜெபத்தைப் புரிந்தவர்களாய், தேவ சித்தம் நம் வாழ்வில் நடந்தேற நம்மை அர்ப்பணிப்போமே தவிற நமது சித்தம் நிரைவேற தேவனிடம் மன்றாடி ஜெபிக்கமாட்டோம்.

மேலும் நமது எதிர்கால வாழ்வு தேவன் கைகளில் உள்ளது என்பதை புரிந்தவர்களாய் அதைக் குறித்த தேவையற்ற கவலையில்லாதவர்களாய் நமக்கு நாள்தோறும் உள்ள தேவைகளை தேவன் சந்திப்பதற்காக நன்றி கூறுகிறவர்களாய் இருப்போம். உதாரண_மாக நமது குழந்தைகளுடைய எதிர்காலத்தில் சமுதாயத்தில் என்னவாக இருக்க வேண்டும், எங்கு வாழ வேண்டும் போன்ற காரியங்களை தேவனின் கரத்தில் ஒப்படைத்துவிட்டு, நிகழ்காலங்களில் அவர் தேவனை அறிகிற அறிவில் வளர்ப்பதில் அக்கரையுள்ளவர்களாய் இருப்போம்.

மேலும் தேவ கிருபை மற்றும் அவரின் தயவு இல்லாமல் வாழ முடியாது என்பதை உணர்ந்தவர்களாய் மனத்தாழ்மையோடு சோதனைகளுக்கும், தீமைகளுக்கும் நம்மை விலக்கி இரட்சிக்க ஜெபிப்போமே தவிர, நமது ஆவிக்குரிய வாழ்வின் பரிசுத்தத்தை நாமே மெச்சிக்கொண்டு அவைகளோடு வீணான போராட்டம் போராடுகிறவர்களாய் இருக்கமாட்டோம்.

**மூன்றாவது தேவ இராஜ்ஜியம் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கும் என்பது.**

**மத்தேயு 7 : 2 ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.**

நாம் மற்றவர்களை நமது அறிவிர்க்குட்பட்ட சரி, தவறு என்பவைகளின் மூலம் நியாயந்தீர்க்காமல், தேவ கிருபையை சார்ந்தவர்களாய், எல்லோரையும், நாம் ஒரு தவறைச் செய்யும் போது எவ்வாறு நம்மை நாமே மன்னிக்கிறோமோ, மற்றவர்களையும் அவ்வாறு மன்னிக்கிறவர்களாய் இருக்கக்கடவோம்.

**1 கொரிந்தியர் 13 : 10** ஆம் வசனம் சொல்லுகிறது **நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.**

எனவே மற்றவர்கள் வாழ்வில் காணப்படும் குறைவுகள் அல்லது பரிசுத்தமில்லாத காரியங்களை நாம் சுட்டிக்காட்டுவதற்கு பதிலாக, நிரைவான வாழ்க்கையை அல்லது பரிசுத்தமான வாழ்க்கையை அவர்கள் முன் வாழ்ந்துகாட்டுவதன் மூலம். அவர்கள் குறைகளை அவர்களே உணரும்படி செய்தால், அவர்களும் நிறைவான வாழ்க்கையை நாடி சென்று தேவ சித்தத்திற்கு தங்களை அர்ப்பணிப்பார்கள். அப்பொழுது நாம் **1.கொரிந்தியர் 9 : 22 ….. எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்** என்கிற வசனத்திற்கு சொந்தகாரராவோம்.

**மத்தேயு 7 : 19 – 20** நல்ல **கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**

நாம் தேவ இராஜ்ஜியத்திற்கு கனிகொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும். கனிகொடுப்பது என்பது செயலில் மட்டுமல்லாமல், நமது சிந்தனைகளையும் தேவன் அறிவார் என்கிற உணர்வோடு நமக்கு உள்ளிருந்து தோன்றுகிற சிந்தனைகளும் தேவனுக்கு பிரியமாய் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து சீர்திருத்த வேண்டும் அவ்வாறு சீர்திருத்தாத பட்சத்தில் நாம் தேவன் மீது காட்டும் எந்த வகை வைராக்கியமும் வீண் என்பதை **1 யோவான் 4 : 20 தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், (நியாமில்லாத கோபம் கொண்டால் அல்லது பிறரோடு ஒப்புரவாகாமல் வைராக்கியம் கொண்டால்) அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?**

ஆகையால் நாம் கனிகொடாத மரத்தை போல வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுகிறவர்களாயிராமல், சகோதர சிநேகம் நிறைந்தவர்களாய் இயேசு கிறிஸ்து கொடுத்த புதிய கட்டளைக் உட்பட்டவர்களாய்

**யோவான் 13 : 34 – 35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.** இந்த வசனங்களுக்கு பாத்திரவான்களாய் இப்பண்டிகை காலங்களில் செயல்படுவோம்.

**– கிறிஸ்துவின் பணியில் ATC Youth Team**

**Be an example : 1 Timothy 4 : 12**

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹறாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹறாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹறாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

**திங்கட்கிழமை**
சகோதரிகள் ஜெபம்
இடம் – பாஹறாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

## வார்த்தை

அவருடைய வாயின் வார்த்தை எனக்கு
வேண்டிய ஆகாரம்
என் அழுகையில் என் விண்ணப்பத்தை
கேட்டு
என்னை தேற்றும் ஆதாரம்
ஏனெனில்
ஆதியிலும் வார்த்தை
அந்தமாகவும் வார்த்தை
அல்ஃபா ஒமேகாவும் வார்த்தை
நான் நம்பும் நாளில்
எனக்கு ஜெயங்கொடுக்கிற வார்த்தை..
வாக்குதத்தமாகவும் வார்த்தை நம் வாழ்வின்
அங்கமாகவும் வார்த்தை
நமது தாழ்வில் நிலையான கிரியை செய்யும்
வார்த்தை
மூலைக் கல்லாக வார்த்தை – நம்மை
முத்திரை மோதிரமாக வைக்கும் வார்த்தை
தேவையில் வார்த்தை – வியாதியில்
நம்மை தேற்றுவதும் வார்த்தை
திடப்படுத்தும் வார்த்தை நம்மை
பெலப்படுத்தும் வார்த்தை
ஆரோக்கியமான உபதேசம் உமது
வார்த்தை
ஒப்புரவாகுதலின் உபதேசம் உமது
வார்த்தை
விசுவாசத்தை காத்து கொள்ள உதவுவதும்
வார்த்தை
பரம ஈவை ருசிபார்க்க உதவுவதும் வார்த்தை
நம் உள்ளத்தில் வார்த்தை
நம் வாழ்வின் மதிலாக வார்த்தை
என் சத்துருவே எனக்கு விரோதமாக
சந்தோஷபடாதே
நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்
என்று சத்துருவோடு சவால் விட
வைப்பதும் வார்த்தை
என் தேவனுடைய வார்த்தை
என் இக்கட்டில் எனக்கு அரணான
வார்த்தை
தீமையை பார்க்காத சுத்த கண்ணரே...
அநியாயத்தை நோக்காத பரனே...
என் தீமையை என் அநியாயத்தை
என் மீறுதலை வார்த்தையால் வென்றீரே!
“அப்பா” என்னும் புத்திரசுவிகார
சொந்தமாய்
என்னை கன்மலையின் மேலே தூக்கி
வைத்து – உம்
பிள்ளையாய் என்னை அழகு பார்த்தீரே...
வார்த்தையாகிய மனுபுத்திரனாய் என்னை
காண
பூமிக்கு வந்தீரே...
என்னை பாவமற கழுவி உம் உயிரை நீத்து
மீண்டும்
உயிர்தெழுந்தீரே எனக்காய்
இப்போதும் என்னுடன் வாழுகிறீர்
வார்த்தையாய்....

கிறிஸ்துவுக்காக...

---

## கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

**தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய் சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**
**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை**

**சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

## டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை லேவியராகமம் புஸ்தகங்களிலிருந்து , வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்.

1. பரிசுத்தமானதிலே தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை எப்படி செலுத்த வேண்டும் ?

2. செய்யத்தகாதென்று விலக்கப்பட்டதை செய்தவன் பாவநிவாரணபலியாக எதை செலுத்த வேண்டும் ?

3. போஜன பலியை எப்படி பாகம் பண்ண கூடாது ?

4. எது சமைக்கபட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும் ?

5. கர்த்தர் இஸ்ரவேலின் சமாதான பலிகளில், ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் எதை கொடுத்தார்?

6. இஸ்ரவேலர் வெளியில் பலியிடுகிறவைகளை எங்கே பலியிட வேண்டும் ?

7. மனைவி உயிரோடிருக்கும் போது யாரை விவாகம் பண்ண கூடாது ?

8. பயிரை அறுக்கும்போது எவைகளை பொறுக்க கூடாது ?

9. எதில் அநியாயம் செய்ய கூடாது?

10. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எங்கே தெளிக்க வேண்டும்?

11. பிரமியமுள்ளவன் தொட்ட எது தண்ணீரால் கழுவபட வேண்டும் ?

12.பிரமியமுள்ளவன் சுத்தமானபின் எத்தனை நாள் எண்ணிக் கொள்ளவேண்டும் ?

13. ஆரோன் சர்வாங்க தகனபலிக்காக சபையிடம் எவைகளை வாங்க வேண்டும் ?

14.ஆரோன் இரத்தத்தினால் எவைகளுக்காக பிராயசித்தம் செய்ய வேண்டும் ?

15.இஸ்ரவேலர் வெளியில் பலியிடுகிறவைகளை எங்கே பலியிட வேண்டும் ?

குறிப்பு - விடைகளை வருகின்ற 20-12-2025 க்குள் செய்திமலர் பொறுப்பாளரிடம் (+917305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை லேவியராகமம் புஸ்தகங்களிலிருந்து தேடி கண்டுபிடிக்கவும் .

## நவம்பர் மாத வேத வினாவுக்கு விடை – அதிகாரத்திலுள்ள வசனங்களிலிருந்து

1.அதோனிபேசேக் – 1:6,7

2.யாகேல் – 4:18–21

3.போசீம் – 2: 1– 5

4.கிதியோன் – 6:27

5.யோதாம் – 9:7–15

6.ஓரேப் , சேப் – 7:25

7.கர்த்தருடைய ஆவியின் – 14:6,19

8.யெப்தா – 11:2,7

9.மீகா வீட்டு வாலிப ஆசாரியன் – 18:18–20

10. யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானும் லேவியனுதான
ஒரு வாலிபன் – 17 : 7 –12

11. மிஸ்பா – 20:1

12.பெனூவேலின் மனுஷர் – 8:8,9,17

13.மிஸ்பா – 21:5

14.மனோவா – 13:8

15.கூஷான்ரிஷதாயீம் , யாபீன் – 3:8 , 4:2

## நவம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

1. சகோதரி . சுகந்தி
2. சகோதரி . பியூலா மெர்சி பால்
3. சகோதரி . ஜான்சி
4. சகோதரி . நித்தியா ஜோன்ஸ்
5. சகோதரி . ஜாஸ்மின் மெர்ஸி
6. சகோதரி . சாந்தி
7. சகோதரி . விக்டோரியா ராஜன்
8. சகோதரி . மெர்சலின் தயா
9. சகோதரி . சுபா ஸ்டீபன்
10. சகோதரி . நிஜா
11. சகோதரி . சிநேகா
12. சகோதரி . மரகதம் ஸ்டீபன்
13. சகோதரி . மரிய குளோரி தாஸ்
14. சகோ . எபிநேசர்
15. சகோதரி . ஜீனா சதீஷ்



# December Month Quiz for Children



(Write the answers using the King James Version)

Note:-All children should read the bible carefully and find the answers in the book of **Mathew Chapter 15 - 28** . Submit your answers to the children bible school coordinator on or before 20/12/2025. Please mention the reference along with the answers.

1. What makes a person unclean?
2. What sign did Jesus say that they would receive?
3. Who appeared with Jesus with transfiguration?
4. How many times must we forgive?
5. What did Jesus tell the rich Young ruler?
6. Who will be great in God's kingdom?
7. What did Jesus ride on into Jerusalem?
8. What is the greatest commandment?
9. What did Jesus call the pharisees?
10. What sign show the end time?
11. What does the parable of ten virgins teach?
12. Who betrayed Jesus?
13. What did Jesus pray at gethsemane?
14. Who judged Jesus?
15. What happened when Jesus died?

**CHILDREN'S WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF NOVEMBER**

1. Rheul Arhkinary
2. Jerald
3. Joel
4. Vinay
5. Adriel

6. Andrea
7. Ritiksha
8. Ebisha Joanne
9. Solomon
10. Abel Raj

## கிரகிக்க முடியாத அற்புதம் செய்யும் தேவன்

அதிசயத்தின் தெய்வமே!
அற்புதத்தின் தேவனே!
எண்ணி முடியாத நன்மைகள்
செய்பவரே
திகைத்து நின்ற வேளைகளிலும்
வழிகாட்டி நிற்பவரே! உம் அன்பை
என்னவென்று சொல்வது?
வார்த்தைகள் இல்லை
உம் வேதவசனத்தின் மூலம் எமக்கு
வாக்குத்தத்தம் தந்து
அதனை உறுதிபடுத்தி உம்
ஊழியத்திற்கு
தூண்களாக விளங்க
ஆயத்தப்படுத்துபவரே!
ஆயிரம் நாவுகள் இருந்தாலும் உமக்கு
நன்றி சொல்ல போதாதையா!
சிலந்தி வலையில் சிக்கிய பூச்சி
போலவும்
எம்மை இருளின் ஆதிக்கத்திலிருந்து
மீட்டவரே!
எம் சிறையிருப்பிலிருந்து தூக்கினீரே!
கிரகிக்க முடியாத அற்புதங்கள்
செய்பவரே!
ஆபத்து நாளில் இழப்பின் நேரத்தில்
எமக்கு
அரணாகவும் ஆறுதலும் தந்தவரே!
உம் இறைபணி சிறக்க எம்மை
கபணிக்கையாக அர்ப்பணிக்கின்றேன்
எங்களை எம் வாழ்நாள் முழுவதும்
ஆசீர்வதித்தருள வேண்டுகின்றேன்

- (A. பியூலா மெர்ஸிபால்)

## ANSWERS FOR THE MONTH OF NOVEMBER Matthew CHAPTER 1 - 14

1) Mary and Joseph – Matthew 1 : 16
2) Wisemen (magi) – Matew 2 : 1- 2
3) John the Baptist – Matthew 3 : 1 – 2
4) 40 Days – Matthew 4 : 2
5) Inherit the earth – Matthew 5 : 5
6) The Lord’s Prayer – Matthew 6 : 9 – 13
7) The rock – Matthew 7 : 24
8) He healed His servant – Matthew 8 : 13
9) Matthew – Matthew 9 : 9
10) Twelve – Matthew 10 : 1 – 2
11) John the Baptist’s disciples – Matthew 10 : 1 – 2
12) He healed a man’s withered hand – Matthew 12 : 10 – 13
13) The Word of God – Matthew 13 : 19
14) Peter – Matthew 14 : 28 – 29
15) About 5000 men, besides women and children – Matthew 14 : 19 – 21


பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை




49-வது ஆண்டு விழா


பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை




பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை


பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை


பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை

ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர்**

**Bro. ஆரோக்கியதாஸ்**

**செயலாளர்**

**Bro. தாமஸ்**

**பொருளாளர்**

**Bro. ஜான்சன்**

**பெண்கள் ஐக்கிய தலைவி**

**Sis. டெய்ஸி எபினேசர்**

**வாலிப ஐக்கிய தலைவர்**

**Bro. கிறிஸ்டோபர்**

